993
(6656)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சித்தராயமர்ந்த

திருவருட்பிரகாச வள்ளலாரென்னும்

சிதம்பரம்

# இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருவருட்பாத்திருமுறையிற்

## றிரட்டிய

## பதிகங்களும், நாமாவளிகளும்.

இவை

சென்னை, சிந்தாதிரிப்பேட்டை ஆங்கிலோவர்னக்குலர்ஸ்கூல்

தமிழ்ப்பண்டிதர்

வல்லி - ப. தெய்வநாயகமுதலியார்

அவர்களால்,

சென்னை:

ஸ்ரீ கணேச அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பட்டன.

1906.

புரவலர், சக்தி

திரு. தி. சிதம்பரசாமி பாண்டியன்

அவர்கள்

# அர்ப்பணிப்பு

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர்
நூல் நிலையம்
917
(6656)

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

சிதம்பரம் - இராமலிங்கசுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

# திருவருட்பாத்திருமுறைத்திரட்டு.

காப்பு.

முன்னவனே யானை முகத்தவனே முத்திநலஞ்
சொன்னவனே தூய்மெய்ச் சுகத்தவனே - மன்னவனே
சிற்பரனே யைங்கரனே செஞ்சடையஞ் சேகரனே
தற்பரனே நின்றாள் சரண்.

## முதற் றிருமுறை.

### சிவநேச வெண்பா.

திருச்சிற்றம்பலம்.

சீர்சான்ற வேதச் செழும்பொருளே சிற்சொருபப்
பேர்சான்ற வுண்மைப் பிரமமே - நேர்சான்றோர்
நாடும் பரசிவமே நாயேனுக் கன்புநின்பா
னீடும் படிநீ நிகழ்த்து. (க)

எங்கோவே யான்புகலி யெம்பெருமான் றன்மணத்தி
லங்கோர் பொருட்சுவையா னானேனே - லிங்கேநின்
றாள்வருந்த வேண்டேன் றலைபட்டே னாதலினிந்
நாள்வருந்த வேண்டுகின்றே னான். (சஉ)

பூவுக் கரையரும்வான் புங்கவரும் போற்றுதிரு
நாவுக் கரையரெனு நன்னுமை - மேவுற்ற
தொண்டர்க்கு நீகட்டுச் சோறெடுத்தா யென்றறிந்தோ
தொண்டர்க்குத் தொண்டனென்பார் சொல். (௬௩)

எம்பரவை யோமண் ணிடந்தலைந்தான் சுந்தரனார்
தம்பரவை வீட்டுத் தலைக்கடையாய் - வம்பணையாய்
வாயிற் படியாய் வடிவெடுக்க நேர்ந்திலனே
மாயப்பெயர் நீண்ட மால். (௬௪)

வேத முடிவோ விளங்கா கமமுடிவோ
நாத முடிவோ நவில்கண்டாய் - வாதமுறு
மாசகர்க்கு ணில்லா மணிச்சுடரே மாணிக்க
வாசகர்க்கு நீயுரைத்த வாறு. (௬௫)

மஹாதேவமாலை.

பொன்னாகி மணியாகிப் போக மாகிப் புறமாகி யகமாகிப் பூதமாகி, மன்னாகி மலையாகிக் கடலு மாகி மதியாகி ரவியாகி மற்று மாகி, முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி முழுதாகி நாதமுற முழங்கி யெங்கு, மின்னாகிப் பரவியின்ப வெள்ளந் தேக்க வியன் கருணைப் பொழிமுகிலாய் விளங்குந் தேவே. (௧உ)

சகமாகிச் சீவனாயீச னாகிச் சதுமுகனாய்த் திருமாலா யரன்றானாகி, மகமாயை முதலாய்க்கூ டத்த னாகி வான்பிரம மாகியல்லா வழக்கு மாகி, யிகமாகிப் பரமாகிச் சமய கோடி யெத்தனையு மாகிய வை யெட்டா வான்கற், பகமாகிப் பரமாகிப் பரம மாகிப் பராபர மாய்ப் பரம்பரமாய்ப் பதியுந் தேவே. (௧எ)

என்னரசே யென்னுயிரே யென்னை யீன்ற வென்றாயே யென் குருவே யெளியே னிங்கே, தன்னரசே செலுத்தியெங்கு முழலா நின்ற சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி யந்தோ, மின்னரசே பெண்ணமுதே யென்று மாதர் வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே யெண்ணிக், கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே குப்புறுகின் றேன்மயலிற் கொடிய னேனே. (எ௬)

## திருவருண்முறையீடு.

நான்படும் பாடு சிவனே யுலகர் நவிலும் பஞ்சு
தான்படுமோ சொல்லத் தான்படுமோ வெண்ணத் தான் படுமோ
கான்படு கண்ணியின் மான்படு மாறு கலங்கி நின்றே
னேன்படு கின்றனை யென்றிரங்கா யென்னி லென் செய்வனே.()

வன்பட்ட கூடலில் வான்பட்ட வையை வரம்பிட்ட நின்
பொன்பட்ட மேனியிற் புண்பட்ட போதிற் புவிநடை யாந்
துன்பட்ட வீரந் தோவாத வூர்தந் தூய நெஞ்ச
மென்பட்ட தோவின்று கேட்டவென் னெஞ்ச மிடி பட்டதே. ()

பிட்டுக்கும் வந்துமுன் மண்சுமந்தா யென்பர் பித்த னென்ற
திட்டுக்குஞ் சீருள் செய்தளித்தா யென்பர் தீ விறகுக்
கட்டுக்கும் பொன்முடி காட்டிநின்றா யென்பர் கண்டிட வென்
மட்டுக்கும் வஞ்சகத் தெய்வமென்கோ முக்கண் மாணிக்க மே. ()

### வடிவுடைமாணிக்கமாலை.

உன்னுந் திருவொற்றி யூருடை யார்நெஞ் சுவப்ப வெழிற்
றுன்னு முயிர்ப்பயி ரெல்லாந் தழைக்கச் சுகக் கருணை
யென்னுந் திருவமு தோயாம லூற்றி யெமது ளத்தின்
மன்னுங் கடைக்கண் மயிலே வடிவுடை மாணிக்க மே. (௯௯)

மாநந்த மார்யயற் காழிக் கவுணியர் மாம ணிக்கன்
றாநந்த வின்னமு தூற்றுந் திருமுலை யார ணங்கே
கானந்த வோங்கு மெழிலொற்றி யாருட் களித் தியலும்
வானந் தருமிடை மானே வடிவுடை மாணிக்க மே. (௯௫)

வாழிநின் சேவடி போற்றிநின் பூம்பத வாரிசங்கள்
வாழிநின் றண்மலர் போற்றிநின் றண்ணளி வாழிநின்சீர்
வாழியென் னுள்ளத்தி னீயுநின் னொற்றி மகிழ்நருநீ
வாழியென் னருயிர் வாழ்வே வடிவுடை மாணிக்கமே. (௪0௧)

### இங்கிதமாலை.

கற்றைச் சடையீர் திருவொற்றிக் காவலுடையீ ரீங்கடைந்தீ
ரிற்றைப் பகலே நன்றென்றே னிற்றை யிரவே நன்றெமக்குப்

பொற்றைத் தனத்தாய் கையமுதம் பொழியா தலர்வாய்ப் புத்தமுத
மிற்றைக் களித்தா யென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. ()

வளநீ ரொற்றி வாணரிவர் வந்தார் நின்றூர் மாதேநா
முளநீர்த் தாக மாற்றுறுநீ ருதவ வேண்டு மென்றூர்நான்
குளநீ ரொன்றே யுளதென்றேன் கொள்ளேமிடைமேற்கொளுநிந்த
விளநீர் தருக வென்கின்று ரிதுதான் சேடி யென்னேடீ. (கஙஉ)

## இரண்டாவது திருமுறை.

### புண்ணிய விளக்கம்.

பாடற் கினிய வாக்களிக்கும் பாலுஞ் சோறும் பரிந் தளிக்குங்
கூடற் கினிய வடியவர் தங் கூட்ட மளிக்குங் குண மளிக்கு
மாடற் கினிய நெஞ்சேநீ யஞ்சேலென்மே லாணை கண்டாய்
தேடற் கினிய சீரளிக்குஞ் சிவாய நமவென் றிடு நீறே. (க)

கண்கொண் மணியை முக்கனியைக் கரும்பைக் கரும்பின் கட்டி தனை, விண்கொ ளமுதை நம்மரசை விடைமே னமக்குத் தோற்று விக்கு, மண்கொள் வினையா னெஞ்சேநீ யஞ்சே லென்மே லாணை கண்டாய், திண்கொண் முனிவர் சுரர்புகழுஞ் சிவாய நம வென் றிடு நீறே. (கூ)

### எழுத்தறிபெருமான்மாலை.

பூமாந் தும் வண்டெனநின் பொன்னருளைப் புண்ணியர்க
டாமாந்தி நின்னடிக்கீழ்ச் சார்ந்தநின்று ரையோநான்
காமாந்த காரமெனுங் கள்ளுண்டு கண்மூடி
யேமாந்தே னொற்றி யெழுத்தறியும் பெருமானே. (கச)

பன்னு மனத்தாற் பரிசிழந்த பாதகனேன்
றுன்னுமல வெங்கதிரோன் சூழ்கின்ற சோடையினு
னின்னருணீர் வேட்டு நிலைகலங்கி வாடுகின்றே
னின்னுமறி யாயோ வெழுத்தறியும் பெருமானே. (கஎ)

### வேட்கைக்கொத்து.

விண்படைத்த புகழ்த்தில்லை யம்பலத்தா னெவர்க்கும் மேலானு னன்பருள மேவுநட ராஜன், பண்படைத்த வெளையறியா விளம்

பருவந் தனிலே பரிந்துவந்து மாலையிட்டான் பார்த்தறியான் மீட்டும், பெண்படைத்த பெண்களெலா மவமதித்தே வலது பேசுகின்றார் கூசுகின்றேன் பிச்சியென லானேன், கண்படைத்துங் குழியில்விழக் கணக்குமுண்டோ வவன்றன் கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி. (௧)

என்னுயிரிற் கலந்துகலந் தினிக்கின்ற பெருமா னென்னிறைவன் பொதுவினட மியற்றுநட ராஜன், றன்னையறி யாப்பருவத் தென்னைமணம் புரிந்தான் றனையறிந்த பருவத்தே யெனையறிய விரும்பான், பின்னையன்றி முன்னுமொரு பிழைபுரிந்தேனில்லை பெண்பரிதா பங்காணல் பெருந்தகைக்கு மழகோ, கன்னலென்றாற் கைக்கின்ற கணக்குமுண்டோ வவன்றன் கணக்கறிந்தும் விடுவேனோ கண்டாயென் றோழி. (௨)

## மூன்றாவது திருமுறை.

### இரங்கன்மாலை.

பாடல் கமழும் பதமுடையார் பணைசே ரொற்றிப் பதியுடையார், வாட லெனவே மாலையிட்ட மாண்பே யன்றி மற்றவரா, லாடலளிசூழ் குழலாயுன் றுணை யொன்று மறியனடி, கூடல் பெறவே வருந்து கின்றேன் குறையை யெவர்க்குக் கூறுவனே. (௫)

ஆல மிருந்த களத்தழக ரணிசே ரொற்றி யாலயத்தார்
சால வெனக்கு மாலை யிட்ட தன்மை யொன்றே யல்லாது
கால நிரம்ப வவர்புயத்தைக் கட்டி யணைந்த தில்லையடி
கோல மதிவாண் முகத்தாயென் குறையை யெவர்க்குக் கூறுவனே.

### காதன்மாட்சி.

நிலவார் சடையார் திருவொற்றி நிருத்தர் பவனி தனைக்காண
நலவா தரவின் வந்துநின்றே னங்கா யெனது நாண்கவர்ந்து
பலவா தரவா னமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நா
முலவா தோடி னாலுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே. (௪)

நாடார் வளங்கொ ளொற்றிநகர் நாதர் பவனி தனைக்காண
நீடா சையினால் வந்துவந்து நின்றா னமது நிறைகவர்ந்து

பாடார் வலரா னமைத்திரும்பிப் பாரா தோடு கின்றார்நா
மோடா தோடி ஞானுமவ ரோட்டம் பிடிக்க வொண்ணாதே.()

## நான்காவது திருமுறை.

### ஆளுடையபிள்ளையாரருண்மாலை.

தத்துவ நிலைக டனித்தனி யேறித் தனிப்பர நாதமாந் தலத்தே, யொத்ததன் மயமா நின்னைநீ யின்றி யுற்றிட லுயிரநு பவமென், றித்துணை வெளியி னென்னையென் னிடத்தே யிருந்தவா றளித்தனை யன்றோ, சித்தநற் காழி ஞாநசம் பந்தச் செல்வமே யெனது சற் குருவே. (௩)

சீரார் சண்பைக் கவுணியர்தந் தெய்வ மரபிற் றிகழ்விளக்கே, தெவிட்டா துளத்திற் றித்திக்குந் தேனே யழியாச் செல்வமே; காரார் மிடற்றுப் பவளமலைக் கண்ணின் முளைத்த கற்பகமே, கரும்பே கனியே யென்னிரண்டு கண்ணே கண்ணிற் கருமணியே; யோரார் பருவ மூன்றிலுமை யினிய முலைப்பா லெடுத்தூட்டு, மின்பக் குதலை மொழிக்குருந்தே யென்னு ளுயிருக் கொருதுணையே; பேரார் ஞாந சம்பந்தப் பெருமா னேநின் றிருப்புகழைப், பேசு கின்றோர் மேன்மேலும் பெருஞ்செல் வத்திற் பிறங்குவரே. (௧)

### ஆளுடையவரசருண்மாலை.

திருத்தகுசீ ரதிகையருட் டலத்தி லோங்குஞ் சிவக்கொழுந்தி னருட்பெருமைத் திறத்தால் வாய்மை, யுருத்தகுமெய் யுணர்ச்சிவடி வாகிச் சைவ வொளிவிளங்க நாவரசென் றொருபேர் பெற்றுப், பொருத்தமுற வுழவாரப் படைகைக் கொண்ட புண்ணியனே நண்ணியசீர்ப் புநித னேயென், கருத்தமர்ந்த கலைமதியே கருணை ஞானக் கடலேநின் கழல்கருதக் கருதுவாயே. (௧)

கண்ணுளே விளங்குகின்ற மணியேசைவக் கனியேநா வரசே செங் கரும்பே வேதப், பண்ணுளே விளைந்தவருட் பயனேயுண் மைப் பதியோங்கு நிதியேநின் பாத மன்றி, விண்ணுளே யடைகின்ற போகமொன்றும் விரும்பேனென் றனையாள வேண்டுங் கண்டா, யொண்ணுளே யொன்பதுவாய் வைத்தாயென்ற வுத்தமனே சித்தமகிழ்ந் துதவு வோனே. (௫)

### ஆளுடையநம்பிகளருண்மாலை.

*வான்காண விந்திரனு மாலயனு மாதவருந்
தான்காண விறையருளாற் றனித்தவெள் ளியானையின்மேற்
கோன்காண வெழுந்தருளிக் குலவியநின் கோலமதை
நான்காணப் பெற்றிலனே நாவலூர்ப் பெருந்தகையே.* (௯)
*பேரூரும் பரவைமனப் பிணக்கறவெம் பெருமானை
யூரூரும் பலபுகல வோரிரவிற் றூதனெனத்
தேரூருந் திருவாரூர்த் தெருவுதொறு நடப்பித்தா
யாரூர நின்பெருமை யயன்மாலு மளப்பரிதே.* (௧௦)

### ஆளுடையவடிகளருண்மாலை.

*தேடுகின்ற வானந்தச் சிற்சபையிற் சின்மயமா
யாடுகின்ற சேவடிக்கீ ழாடுகின்ற வாரமுதே
நாடுகின்ற வாதவூர் நாயகனே நாயடியேன்
வாடுகின்ற வாட்டமெலாம் வந்தொருக்கான் மாற்றுதியே.* (௫)
*சேமமிகுந் திருவாதவூர்த்தேவென் றுலகுபுகழ்
மாமணியே நீயுரைத்த வாசகத்தை யெண்ணுதொறுங்
காமமிகு காதலன்றன் கலவிதனைக் கருதுகின்ற
வேமமுறு கற்புடையா ளின்பினுநின் பெய்துவதே.* (௯)

## ஐந்தாவது திருமுறை.

### தெய்வமணிமாலை.

*காமவுட் பகைவனுங் கோபவெங் கொடியனுங் கனலோப முழு மூடனுங், கடுமோக வீணனுங் கொடுமத மெனுந்துட்ட கண்கெட்ட வாங்காரியும்; ஏமமறு மாச்சரிய விழலனுங் கொலையென் றியம்புபா தகனு மாமிவ், வெழுவரு மிவர்க்குற்ற வுறவான பேர்களு மெனைப்பற் றிடாமலருள்வாய்; சேமமிகு மாமறையி னோமெனு மருட்பதத் திறனருளி மலய முனிவன், சிந்தனையின் வந்தனை யுவந்த மெய்ஞ் ஞானசிவ தேசிக சிகா ரத்னமே; தாமமொளிர் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர் தலமோங்கு கந்த வேளே, தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி சண்முகத் தெய்வ மணியே.* (௯)
*நிலையுறு நிராசையா முயர்குலப் பெண்டிரொடு நிகழ்சாந்த மாம் புதல்வனும், நெறிபெறு முதாரகுண மென்னுநற் பொருளுமரு*

ணீக்குமறி வாந்துணை வனும்; மலைவறு சிராங்கார நண்பனுஞ் சுத்த முறு மனமென்னு நல்லேவலும், வருசகல கேவல மிலாதவிட மும் பெற்றுவாழ்கின்ற . . ாழ்வருளு . ாய்; . . லையிலாச் சிவஞான வாரியே யானந்த வமுதமே கூமுத மலர்வா, யணிகொள்பொற் கொடிபசுங் கொடியிரு புறம்படர்ந் தழகுபெற வருபொன் மலையே; தலைவர் புகழ் சென்னையிற் கந்தகோட் டத்துள்வளர் தலமோங்கு கந்த வேளே, தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி சண்முகத் தெய்வ மணியே. (எ)

ஒருமையுட னினதுதிரு மலரடி நினைக்கின்ற வுத்தமர்த முறவுவேண்டும், உள்ளொன்று வைத்துப் புறம்பொன்று பேசுவா ருறவுகலவாமை வேண்டும்; பெருமைபெறு நினதுபுகழ் பேசவேண்டும்பொய்மை பேசா திருக்க வேண்டும், பெருநெறி பிடித்தொழுக வேண்டுமத மானபேய் பிடியா திருக்க வேண்டும்; மருவுபெண்ணாசையை மறக்கவே வேண்டுமுனை மறவா திருக்க வேண்டும், மதிவேண்டு நின்கருணை நிதிவேண்டு நோயற்ற வாழ்விலுன் வாழவேண்டும்; தருமமிகு சென்னையிற் கந்தகோட் டத்துள் வளர் தலமோங்கு கந்தவேளே, தண்முகத் துய்யமணி யுண்முகச் சைவமணி சண்முகத் தெய்வ மணியே. (அ)

## ஆறாவது திருமுறை.

### சிற்சபை விளக்கம்.

சரத்தை யாதிய சுபகுணஞ் சிறிதுஞ் சேர்ந்திலேனருட் செயலிலேன் சாகா, வரத்தை வேண்டினேன் வந்துநிற்கின்றேன் வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன், கரத்தை நேருளக் கடையனென் றெனைநீ கைவிடேலொரு கணமினி யாற்றேன், தரத்தை யீந்தருள் வாய்வட லரசே சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. ()

பத்தி யஞ்சிறி துற்றிலே னுன்பாற் பத்தி யொன்றிலேன் பரமநின் கருணை, மத்தி யம்பெற வந்துநிற் கின்றேன் வள்ளலே யுன்றன் மனக்குறிப் பறியேன், எத்தி யஞ்சலை யெனவரு ளாயேலேழை யேனுயி ரிழப்பனுன் னாணை, சத்தி யம்புகன் றேன்வட லரசே சத்தி யச்சபைத் தனிப்பெரும் பதியே. (௯)

## அத்துவிதானந்தத்தநுபவவிடையீடு.

நாதாந்தத் திருவீதி நடந்துகடப் பேனோ ஞானவெளி நடுவின்ப
நடந்தரிசிப் பேனோ, போதாந்தத் திருவடியென் சென்னிபொருந்
திடுமோ புதுமையறச் சிவபோகம் பொங்கிநிறைந் திடுமோ, வேதா
ந்த சித்தாந்த சமரசமும் வருமோ வெறுவெளியிற் சுத்தசிவ வெளி
மயந்தா னுறுமோ, பாதாந்த வரைநீறு மணக்கமன்றி லாடும் பரமர்
திரு வுளமெதுவோ பரமமறிந் திலனே. (௮)

களக்கமறப் பொதுநடநான் கண்டுகொண்ட தருணங் கடை
ச்சிறியே னுளம்பூத்துக் காய்த்ததொரு காய்தான், விளக்கமுறப்
பழுத்திடுமோ வெம்பியுதிர்ந் திடுமோ வெம்பாது பழுக்கினுமென்
கரத்திலகப் படுமோ, கொளக்கருது மலமாயைக் குரங்குகவர்ந் திடு
மோ குரங்குகவ ராதெனது குறிப்பிலகப்படினுந், துளக்கமற
வுண்ணுவனோ தொண்டைவிக்கிக் கொளுமோ சோதிதிரு வுளமெ
துவோ வேதமறிந் திலனே. (௯)

ஞானமணிப் பொதுநடஞ்செய் திருவடிகண் டிடவே நடக்கின்
றேனந்தோ முன் னடந்தவழி யறியேன், ஊனாரிகு மாணவமாம்
பாவியெதிர்ப் படுமோ வுடைமையெலாம் பறித்திடுமோ நடைமெலி
ந்து போமோ, ஈனமுறு மகங்காரப் புலிகுறுக்கே வருமோ விச்
சையெனு மிராக்கதப்பே யெனைப்பிடித்துக் கொளுமோ, ஆனம
லத் தடைநீக்க வருட்டுணைதா னுறுமோ ஐயர்திரு வுளமெதுவோ
யாதுமறிந் திலனே. (௧௦)

## பிரியேனென்றல்.

ஆணையுன்மே லாணையுன்மே லாணையுன்மே லையா அரைக்க
ணமு நினைப்பிரிந்தே யினித்தரிக்க மாட்டேன், கோணைநிலத்
தவர்பேசக் கேட்டதுபோ லின்னுங் குறும்புமொழி செவிகளுறக்
கொண்டிடவு மாட்டேன், ஊணையுறக் கத்தையுநான் விடுகின்றே
னீதா னுவந்துவரா யெனிலென்ற னுயிரையும்விட் டிடுவேன், மா
ணைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்நீ யெனது மனமறிவா யின
முனக்கு வகுத்துரைப்ப தென்னே. (௨)

படமுடியா தினித்துயரம் படமுடியா தரசே பட்டதெல்லாம் போதுமிந்தப் பயந்தீர்த்திப் பொழுதென், னுடலுயிரா தியவெல்லாம் நீயெடுத்துக் கொண்டுன் னுடலுயிரா தியவெல்லா முவந்தெனக்கே யளிப்பாய், வடலுறுசிற் றம்பலத்தே வாழ்வாயென் கண்ணுண் மணியேயென் குருமணியே மாணிக்க மணியே, நடனசிகா மணியேயென் னவமணியேஞான நன்மணியே பொன்மணியே நடராஜ மணியே. (௯)

வாழையடி வாழையென வந்ததிருக்கூட்ட மரபினில்யா னொருவனன்றோ வகையறியே னிந்த, வேழைபடும் பாடுனக்குத் திருவுளச் சம்மதமோ விதுதகுமோ விதுமுறையோ விதுதருமந் தானோ, மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யா னுனக்கு மகனலனோ நீயெனக்கு வாய்த்த தந்தை யலையோ, கோழையுலகுயிர்த்துயர மினிப்பொறுக்க மாட்டேன் கொடுத்தருணின் னருளொளியைக் கொடுத்தருளிப் பொழுதே. (௧0)

வாதனைக்கிரங்கல்.

படமாட்டேன் றுயர்சிறிதும் படமாட்டே னினிநான் பயப்படவு மாட்டேனும் பதத்துணையே பிடித்தேன், விடமாட்டே னேமாந்து விடமாட்டேன் கண்டீர் மெய்ம்மையிது நும்மாணை விளம்பினனும் மடியேன், கெடமாட்டேன் பிறர்மொழிகள் கேட்டிடவு மாட்டேன் கிளரொளியம் பலத்தாடல் வளரொளிநும் மல்லால், நடமாட்டே னென்னுளத்தே நான்சாகமாட்டே னல்லதிரு வருளாலே நான்றுணி னேனே. (௧)

பாயிரமா மறைகளெலாம் பாடுகின்ற பாட்டுன் பாட்டேயென் றறிந்துகொண்டேன் பரம்பொருளுன் பெருமை, ஆயிரமாயிரங்கோடி நாவுடையோ ரெனினு மணுத்துணையும் புகலரிதே லந்தோவிச் சிறியேன், வாயிரங்கா வகைபுகலத் துணிந்தேனென்னுடைய மனத்தாசை யொருகடலோ வெழுகடலிற் பெரிதே, சேயிரங்கா முனமெடுத்தே யணைத்திடுந்தா யனையாய் திருச்சிற்றம் பலம்விளங்குஞ் சிவஞான குருவே. (௨)

## அருள்விளக்கமாலை.

அருள்விளக்கே யருட்சுடரே யருட்சோதிச் சிவமே
யருளமுதே யருணிறைவே யருள்வடிவப் பொருளே
யிருள்கடிந்தென் னுளமுழுது மிடங்கொண்ட பதியே
யென்னறிவே யென்னுயிரே யெனக்கினிய வுறவே
மருள்கடிந்த மாமணியே மாற்றறியாப் பொன்னே
மன்றில்நடம் புரிகின்ற மணவாளா வெனக்கே
தெருளளித்த திருவாளா ஞானவுரு வாளா
தெய்வநடத் தரசேநான் செய்மொழியேற் றருளே. (௧)

பார்த்தாலும் நினைத்தாலும் படித்தாலும் படிக்கப்
பக்கநின்று கேட்டாலும் பரிந்துணர்ந் தாலும்
ஈர்த்தாலும் பிடித்தாலுங் கட்டியணைத் தாலு
மித்தனைக்குந் தித்திக்கு மினித்தசுவைக் கரும்பே
வேர்த்தாவி மயங்காது கனிந்தநறுங் கனியே
மெய்ம்மையறி வானந்தம் விளக்குமரு ளமுதே
தீர்த்தாவென் றன்பரெலாந் தொழப்பொதுவில் நடிக்குந்
தெய்வநடத் தரசேயென் சிறுமொழியேற் றருளே. (௨௬)

கல்லார்க்குங் கற்றவர்க்குங் களிப்பருளுங் களிப்பே
காணார்க்குங் கண்டவர்க்குங் கண்ணளிக்குங் கண்ணே
வல்லார்க்கு மாட்டார்க்கும் வரமளிக்கும் வரமே
மதியார்க்கும் மதிப்பவர்க்கும் மதிகொடுக்கு மதியே
நல்லார்க்கும் பொல்லார்க்கும் நடுநின்ற நடுவே
நரர்களுக்குஞ் சுரர்களுக்கும் நலங்கொடுக்கு நலமே
யெல்லார்க்கும் பொதுவில்நட மிடுகின்ற சிவமே
யென்னரசே யான்புகலு மிசையுமணிந் தருளே. (௩[illegible])

## உறுதிகூறல்.

வட்டிமேல் வட்டிகொள் மார்க்கத்தில் நின்றீர் வட்டியை வள
ர்க்கின்ற மார்க்கத்தை யறியீர், பெட்டிமேல் பெட்டிவைத் தான்
இன்றீர் வயிற்றுப் பெட்டியை நிரப்பிக்கொண் டொட்டியுள் ளிரு

ந்தீர், பட்டினி கிடப்பாரைப் பார்க்கவு நேரீர் பழங்கஞ்சி யாயினும் வழங்கவு நினையீர், எட்டிபோல் வாழ்கின்றீர் கொட்டிபோற் கிளைத் தீ ரெத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே. (௭)

துன்மார்க்க நடையிடைத் தூங்குகின் றீரே தூக்கத்தை விடுகின்ற துணையொன்று கருதீர், சன்மார்க்க சங்கத்தைச் சார்ந்திட விழையீர் சாவையும் பிறப்பையுந் தவிர்ந்திட விரும்பீர், பன்மார்க் கஞ் செல்கின்ற படிற்றுள மடக்கீர் பசித்தவர் தம்முகம் பார்த்துண வளியீர், என்மார்க்க மெச்சுகம் யாதுநும் வாழ்க்கை யெத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே. (௮)

பண்ணாத தீமைகள் பண்ணுகின் றீரே பகராத வன்மொழி பகருகின்றீரே, நண்ணாத தீயின நண்ணுகின் றீரே நடவாத நடத்தைகள் நடக்க வந்தீரே கண்ணாகக் காக்கின்ற கருத்தனை நினைந்தே கண்ணார நீர்விட்டுக் கருதறியீரே, எண்ணாத தெண்ணவு நேருமோர்கால மெத்துணை கொள்கின்றீர் பித்துலகீரே. (௧௦)

### இதுவுமது.

சாதியிலே மதங்களிலே சமயநெறிகளிலே சாத்திரச்சந் தடிகளிலே கோத்திரச் சண்டையிலே, ஆதியிலே யபிமானத் தலைகின்ற வுலகீ ரலைந்தலைந்து வீணேநீ ரழிதலழ கலவே, நீதியிலே சன்மார்க்க நிலையினிலே ஞான நிருத்தமிடுந் தனித்தலைவ ரொருத்தரவர் தாமே, வீதியிலே யருட்சோதி விளையாடல் புரிய மேவுகின்ற தருணமிது கூவுகின்றே னுமையே. (௧)

காடுவெட்டி நிலந்திருத்திக் காட்டெருவும் போட்டுக் கரும்பைவிட்டுக் கடுவிரைத்துக் களிக்கின்ற வுலகீர், கூடுவிட்டுப் போயினபின் னெதுபுரிவீ ரெங்கே குடியிருப்பீ ரையோநீர் குறித்தறியீ ரிங்கே, பாடுபட்டீர் பயனறியீர் பாழ்க்கிறைத்துக் கழித்தீர் பட்டதெலாம் போதுமிது பரமர்வரு தருணம், ஈடுகட்டி வருவீரேலின்பமிகப் பெறுவீ ரெண்மையுரைத் தேனலநா னுண்மையுரைத் தேனே. (௨)

ஆற்றுவெள்ளம் வருவதன்முன் னணைபோட வறியீ ரகங்காரப் பேய்பிடித்தீ ராடுதற்கே யறிவீர், கூற்றுவருங் காலதனுக் கெதுபுரிவீ ரையோ கூற்றுதைத்த சேவடியைப் போற்றவிரும் பீரே, வேற்

றுரைத்து வினைபெருக்கி மெலிகின்ற வுலகீர் வீணுலகக்கொடுவ
ழக்கை விட்டுவிட்டு வம்மின், சாற்றுவக்க வெனதுதனித் தந்தை
வருகின்ற தருணமிது சத்தியஞ்சிற் சத்தியைச் சார்வதற்கே. (கூ)

சுத்தசிவநிலை.

செத்தாரை யெல்லாந் திரும்ப வெழுப்புதலிங்
கெத்தால் முடியுமெனி லெம்மவரே - சித்தாம்
அருட்பெருஞ் சோதி யதனுன் முடியுந்
தெருட்பெருஞ் சத்தியமீ தே. (கூள)

இவ்வுலகிற் செத்தாரை யெல்லா மெழுக வெனி
லெவ்வுலகும் போற்ற வெழுந்திருப்பார் - செவ்வுலகிற்
சிற்றம் பலத்தான் றிருவருள்பெற் றோர்நோக்க
முற்றவரை யுற்றவர்க ளூற்று. (கூஅ)

மெய்யருள்வியப்புமாலை.

இராகம் - அடாணு - ரூபகம் - தாளம்

பல்லவி.

எனக்குமுனக்கு மிசைந்தபொருத்த மென்னபொருத்தமோ
இந்தப்பொருத்த முலகில்பிறருக் கெய்தும்பொருத்தமோ.

அப்பாநின்னை யன்றியெங்கு மணைப்பா ரில்லையே
யந்தோநின்னை யன்றியெங்கு மருள்வா ரில்லையே
எப்பாலவர்க்கு நின்னையன்றி யிறைமை யில்லையே
யெனக்குநின்மே லன்றியுலகி லிச்சை யில்லையே. எனக்கு. (க)

நினைக்கநினைக்கத் தித்திப்பெனது நினைவிற் கொடுக்குதே
நின்பாலன்றிப் பிறர்பாற்செல்ல நெஞ்ச நடுக்குதே
எனைத்துன்பொழித்தாட் கொண்டநின்னை யன்னை யென்பனே
யெந்தாயன்பிலே னின்னடிக்கு முன்னையன்பனே. எனக்கு. ()

வள்ளாலுன்னைப் பாடப்பாட வாய்மணக்குதே
வஞ்சவினைக ளெனைவிட்டோடித் தலைவணங்குதே
எள்ளாதுனது புகழைக்கேட்கச் செவிநயக்குதே
யெந்தாய்தயவை யெண்ணுந்தோறு முளம்வியக்குதே. எனக்கு

## நாமாவளி.

அம்பலத்தரசே யருமருந்தே
யானந்தத்தேனே யருள்விருந்தே. (க)

சிவசிவசிவசிவ சின்மயதேஜா
சிவசுந்தரகுஞ்சித நடராஜா. (ரு)

மலைதருமகளே மடமயிலே
மதிமுகவமுதே யிளங்குயிலே. (௪)

ஆனந்தக்கொடியே யிளம்பிடியே
யற்புதத்தேனே மலைமானே. (௫)

இக்கரைகடந்திடி லக்கரையே
இருப்பதுசிதம்பர சர்க்கரையே. (௨0)

ஐயர்திருச்சபை யாடகமே
ஆடுதலானந்த நாடகமே. (௨ரு)

அரகரசிவசிவ மாதேவா
அருளமுதந்தர வாவாவா. (ரு அ)

நடனசிகாமணி நவமணியே
திடனகமாமணி சிவமணியே. (௪௨)

நடராசபலமது நம்பலமே
நடமாடுவதுதிரு வம்பலமே. (௬அ)

ஆதிநீதிவேதனே யாடனீடுபாதனே
வாதிஞானபோதனே வாழ்கவாழ்கநாதனே. (கரு)

நடராசர்பாட்டே நறும்பாட்டு
ஞாலத்தார்பாட்டெல்லாம் வெறும்பாட்டு. (ககூ)

சிதம்பரப்பாட்டே திருப்பாட்டு
ஜீவர்கள்பாட்டெல்லாந் தெருப்பாட்டு. (க00)

அம்பலப்பாட்டே யருட்பாட்டு
அல்லாதபாட்டெல்லா மருட்பாட்டு (க0க)

நகப்பெருஞ்ஜோதி சுகப்பெருஞ்ஜோதி
நவப்பெருஞ்ஜோதி சிவப்பெருஞ்ஜோதி
அகப்பெருஞ்ஜோதி நடப்பெருஞ்ஜோதி
அருட்பெருஞ்ஜோதி யருட்பெருஞ்ஜோதி. (௧௦௫)

பசியாதவமுதே பகையாதபதியே
பகராதநிலையே பறையாதசுகமே
நசியாதபொருளே நலியாதவுறவே
நடராஜமணியே நடராஜமணியே. (௧௦௯)

புரையாதமணியே புகலாதநிலையே
புகையாதகனலே புதையாதபொருளே
நரையாதவரமே நடியாதநடமே
நடராஜநிதியே நடராஜநிதியே. (௧௧௦)

சிவஞானநிலையே சிவயோகநிறைவே
சிவபோகவுருவே சிவமானவுணர்வே
நவநீதமதியே நவநாதகதியே
நடராஜபதியே நடராஜபதியே. (௧௧௧)

தவயோகபலமே சிவஞானநிலமே
தலையேறும்அணியே விலையேறு மணியே
நவவாரநடமே சுவகாரபுடமே
நடராஜபரமே நடராஜபரமே. (௧௧௨)

துதிவேதவுறவே சுகபோதநறவே
துனிதீருமிடமே தனிஞானநடமே
நதியாரநிதியே யதிகாரபதியே
நடராஜகுருவே நடராஜகுருவே. (௧௧௩)

வயமானவரமே வியமானபரமே
மனமோனநிலையே கனஞானமலையே
நயமானவுரையே நடுவானவரையே
நடராஜதுரையே நடராஜதுரையே. (௧௧௪)

## ஆனந்தமேலீடு.

ஊதாதுசங்கே யூதாதுசங்கே யூதாதுசங்கே யூதாதுசங்கே.

கைவிட மாட்டேனென் றாதாது சங்கே
கனக சபையானென் றாதாது சங்கே
பொய்விடச் செய்தானென் றாதாது சங்கே
பூசை பலித்ததென் றாதாது சங்கே. (கசுஎ)

பொன்னடி தந்தானென் றாதாது சங்கே
பொன்னம் பலத்தானென் றாதாது சங்கே
யின்ன லறுததானென் றாதாது சங்கே
யென்னுள் ளமர்ந்தானென் றாதாது சங்கே. (கசுஅ)

நாதமுடியானென் றாதாது சங்கே
ஞான சபையானென் றாதாது சங்கே
பாத மளித்தானென் றாதாது சங்கே
பலித்ததுபூசையென் றாதாது சங்கே. (கஎச)

ஆனந்த நாதனென் றாதாது சங்கே
யருளுடை யப்பனென் றாதாது சங்கே
தானந்த மில்லானென் றாதாது சங்கே
தத்துவச் சோதியென் றாதாது சங்கே. (கஅக)

அம்பலவர் வந்தாரென்று சின்னம்பிடி
யற்புதஞ்செய் கின்றாரென்று சின்னம்பிடி
செம்பலனளித்தாரென்று சின்னம்பிடி
சித்திநிலைபெற்றதென்று சின்னம்பிடி. (க)

சிற்சபையைக் கண்டோமென்று சின்னம்பிடி
சித்திகள்செய் கின்றோமென்று சின்னம்பிடி
பொற்சபை புகுந்தோமென்று சின்னம்பிடி
புந்திமகிழ் கின்றோமென்று சின்னம்பிடி. (உ)

திருவருட்பாத்திருமுறைத்திரட்டு - முற்றிற்று.

Printed at the "Ganesa Press," Vepery, Madras.